2018 ஜூன் 26]

மாண்புமிகு அம்மா அவர்கள் வழியிலே மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் தொடருகின்ற அரசால் அரசாணை வெளியிடப்பட்டு, அந்த மாணவர்களின் சேர்க்கைக்காக வித்திடப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் உயர் கல்வி பெற வேண்டுமென்று எந்த மாணாக்கர்கள் நினைக்கின்றனரோ, அவர்கள் பயன்பெறக்கூடிய வகையில், அவர்களுக்கு அவர்கள் கேட்கின்ற கல்வி நிறுவனங்கள் மூலமாக, அதாவது அது, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாகட்டும், பலவகை தொழில்நுட்பக் கல்லூரியாகட்டும், பொறியியல் கல்லூரியாகட்டும், அனைத்தும் அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. கடந்த அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 65 புதிய கல்லூரிகளைத் தோற்றுவித்து, அனைவரும் உயர் கல்வி பெறக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். அதே வழியில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையிலே தொடருகின்ற அரசு, கடந்த ஆண்டு 11 கல்லூரிகளை வழங்கியதோடு மட்டுமல்லாமல், 360 புதிய பாடப் பிரிவுகளையும் வழங்கியிருக்கிறது. இந்த ஆண்டும் 264 புதிய பாடப் பிரிவுகளை வழங்கியிருக்கிறது. ஆகவே, உயர் கல்வி பெறுவதற்கு, எந்தவிதத்திலும், ஏழையெளிய மாணவர்களுக்கு தடை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொண்டு, அவர் சார்ந்திருக்கின்ற மாவட்டத்திலே ஒரு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கடந்த ஆண்டு தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், அந்தப் பகுதி மக்களுக்கு தேவைகள் ஏதேனும் இருந்தால், அதுகுறித்து அரசானது பரிசீலிக்கும் என்பதைச் சொல்லி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

216—

நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

***24490—திரு. எம். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு வட்டம், பாலக்கொண்டான்குடிகாடு கிராமத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பாலக்கொண்டான்குடிகாடு கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுவிட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நீண்ட நாட்களுக்கு முன்னால் கேட்டதனால், அதற்குப் பிறகு இந்த இலாகா அந்தக் கட்டடத்தைக் கட்டி, இன்றைக்கு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், முன்பெல்லாம் குறுவை சாகுபடி, சம்பா நெல் சாகுபடி என்று இரண்டு வகைகள்தான் இருக்கும். இப்போது, விவசாயம் ஆழ்துளைக் கிணறுகள்மூலம் செய்வதால், நெல் கொள்முதல் நிலையங்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றன. அரசுக்கும் அதிகமாக நெல் கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. அதனால், ஒவ்வோர் ஊராட்சியிலும் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும். நீண்டதூரம் அலைந்து, விற்பனை செய்வதற்கு விவசாயிகளால் இயலாமல் இருப்பதால், தனியார்கள் அதைக் கொள்முதல் செய்கின்றபோது, அதில் நஷ்டம் ஏற்படுகின்றது. எனவே, ஒவ்வோர் ஊராட்சியிலும் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்து, அரசே கொள்முதல் செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 26]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறுவை, சம்பா சாகுபடி இல்லாத காலத்திலும், விவசாயிகள் தற்போது பல்வேறு வகைகளிலும் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள், ஆழ்துளைக் கிணறுகள் மூலமாகவும் நீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதால் நெல் உற்பத்தி அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்கிற தகவலை அவைக்குத் தந்திருக்கிறார்கள். அதற்காக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஊராட்சி அளவில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும் என்று இங்கே கோரிக்கை வைத்தார்கள். அவர் சார்ந்திருக்கிற பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அதிகமாக இருக்கின்றன. எனவே, அந்தப் பகுதிகளில் அனைத்து நாட்களிலும் விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நடப்புக் கொள்முதல் பருவத்தைப் பொறுத்தவரையில், 294 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில், அதிலும், ஒரத்தநாடு பகுதியில் மட்டும் 63 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளிடமிருந்து 76,367 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது, 21,823 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, எந்த இடத்தில், எந்த நேரத்தில் தேவைப்பட்டாலும், அந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஊராட்சிகளிலே அமைக்கப்படுகின்றன. எங்களுடைய பகுதியிலுள்ள ஒரத்தநாடு தாலுகாவில் உள்ள அக்கரைவட்டம் என்கிற ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படவில்லை. தனியார் மூலமாக நிலத்தை வாங்கிக் கொடுத்தால்தான் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படும் என்பதை*

இந்த அரசு ஒரு கொள்கையாக வைத்திருக்கிறது. ஆனால், புறம்போக்கு நிலங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்தால், மற்றவர்களிடமிருந்து நிலத்தை வாங்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படாது, அரசாங்க நிலத்தில் கட்டடங்களைக் கட்டிக் கொள்கிற சூழ்நிலையும் ஏற்படும். ஆகையினால், அரசு புறம்போக்கு நிலங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைக் கட்ட இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியில் நெல் வரத்து இருக்குமேயானால், உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசு புறம்போக்கு நிலத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்ற ஒரு வினாவை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். பயன்படுத்த முடிகிற, கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்த முடியும் என்கிற நிலையில் இருக்கிற, வகை செய்த புறம்போக்கு நிலத்தை அடையாளப்படுத்தினால், அந்தப் புறம்போக்கு நிலத்தில் உடனடியாகக் கட்டடம் கட்டப்படும். மேய்ச்சல் புறம்போக்கு, வாய்க்கால் புறம்போக்கு, குளத்துப் புறம்போக்கு, ஆற்றுப் புறம்போக்கு போன்ற புறம்போக்கு நிலங்களைப் பயன்படுத்த முடியாது. பயன்படுத்தக்கூடிய புறம்போக்கு நிலங்களைப் பயன்படுத்தி நிச்சயமாக, உறுதியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் தாங்களாக முன்வந்து நிலங்களைத் தரும்பட்சத்தில், விவசாயிகளிடத்தில் அந்த நிலத்திற்கான கிரயத்தை அரசு கொடுத்துவிடுகிறது. விவசாயிகள் தங்களுடைய இடத்தை, கட்டடம் கட்டுவதற்கு தானாக முன் வந்து கொடுத்தால் அந்த இடத்திலும் கட்டடம் கட்டப்படும். 40 சென்ட் நிலம் கொடுக்க வேண்டும். விவசாயிகள் நிறைய பேர் நிலம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே, அதுபோன்ற

2018 ஜூன் 26]

இடத்தை அடையாளப்படுத்திக் காட்டினாலும், அந்த இடத்திலும் உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 2011 ஆம் ஆண்டு வரை 311 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மட்டும்தான் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்தன. ஆனால், கடந்த 7 ஆண்டுகளில் மட்டும் 325 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கு ஆணையிட்ட அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

217—

கால்நடை மருத்துவமனை

***12715—திரு. சௌ. தங்கப்பாண்டியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதி, தெற்கு வெங்காநல்லூர் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தெற்கு வெங்காநல்லூர் கிராமத்தில் 3,586 கால்நடை அலகுகள் உள்ளபடியால், அரசாணை எண் 9, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 23–1–2018–ன்படி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய தெற்கு வெங்காநல்லூர் கிராமத்தில்